www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 042

12 ஒக்டோபர் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# 'தமிழீழம் பற்றிக் கதைக்க வேண்டாம். தலைவரைப் பற்றியும் பாட வேண்டாம். என்னைப் போற்றுங்கள்!' நரிகேசி உருத்திரகுமாரன் கட்டளை!



தமிழீழம் பற்றியோ அன்றி தமிழீழ தேசியத் தலைவர் பற்றியோ எவ்வித மான பாடல்களையும் பாட வேண்டாம் என்றும், தன்னைப் பற்றிப் பாடல்களை எழுதுமாறும் இளம் பாடகர் ஒருவரிடம் நரிகேசி உருத்திரகுமாரன் கட்டளை யிட்ட பொழுது பதிவாகிய ஒலிவடிவம் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட் டத்தின் கீழியங்கும் கே.பியின் கட்ட ளைக்கு அமைய, இந்திய-சிங்கள அரசுகளின் உளவாளிகளாகிய காகிப்பு லிகளான சுபன், வி(நாய்)யகம், ரெஜி ஆகியோரின் உதவியுடன் தனக்குத் தானே பிரதமர் பதவியை சூடியிருக்கும் நரிகேசி உருத்திரகுமாரனின் அடிதடி அமைச்சரான காவாலி சேகர், பாடல் இறுவட்டு ஒன்றை வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

எனினும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்னணிப் பாடகர்கள் பலர் மறுப்புத் தெரிவித்துள்ள நிலையில், இலண்டனில் உள்ள இளம் பாடகர் ஒரு வரை அணுகிய காவாலி சேகர், ஐயாயி ரம் பவுண்களை கட்டணமாகத் தருவ தாகக் கூறி பாட்டெழுதுமாறு அவருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். இத னையடுத்து இதற்கான பாடல்களை தயார்படுத்திய இந்த இளம் பாடகர், இது தொடர்பாக நரிகேசி உருத்திரகுமாரனி டம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்த பொழுது, எக்கார ணம் கொண்டும் தமிழீழம் பற்றியோ அன்றி தமிழீழ தேசியத் தலைவர் பற்றி யோ பாடல்கள் எதனையும் எழுத வேண்டாம் என்று நரிகேசி உருத்திரகு மாரன் கட்டளை பிறப்பித்துள்ளார்.

இதனை இந்த இளம் பாடகர் ஆட்சேபித்த பொழுது, நாடுகடந்த அரசு டன் எந்த வகையிலும் தமிழீழ தேசியத் தலைவரோ அன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ தொடர்புபடவில்லை என்று அதட்டல் தொனியில் தெரிவித்த நரிகேசி உருத்திரகுமாரன், தன்னைப் பற்றிப் பாடல்களை எழுதுமாறு ஆணை யிட்டுள்ளார்.

இத்துடன் உலகத் தமிழ் உறவு களின் கவனத்திற்கான நரிகேசி உருத் திரகுமாரனுக்கும், இலண்டனில் உள்ள இளம் பாடகருக்கும் இடையில் நடை பெற்ற தொலைபேசி உரையாடலின் ஒலி வடிவத்தை இணைத்துள்ளோம்.

இதில் உரையாடும் இளம் பாட கர், உருத்திரகுமாரனின் சர்வாதிகார-சுயபுகழ் தேடும் போக்கால் அதிருப் தியுற்ற நிலையில் தொலைபேசி உரையா டலின் ஒலிவடிவத்தை எமது ஊடகப் புலனாய்வாளர்களிடம் கையளித்துள் ளார். அவரது கோரிக்கைக்கு ஏற்ப அவ ரது பெயரை வெளியிடுவதை நாம் தவிர்த்திருக்கும் அதேவேளை, அவரது சம்மதத்துடன் அவரது குரலை வெளியிட்டுள்ளோம்.

# பிரான்சில் நரிகேசியின் காமத்துறை அமைச்சர்!

நரிகேசி உருத்திரகுமாரனின் காமத்துறை அமைச்சர் ஒருவர் பிரான் சில் நடமாடுவது தொடர்பான தகவல் கள் கறுப்பிற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

நாடுகடந்த அரசாங்கத்திற் கான தேர்தலில் குடு மனோவின் உத வியுடன் வாக்கு மோசடி ஊடாக வெற்றி யீட்டிய இவரை, தனது காமத்துறை அமைச்சராக நரிகேசி உருத்திரகுமாரன் நியமித்துள்ளார்.

ஆயுதப் போராட்டமாக தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்றம் பெறுவ தற்கு முன்னர் கிளிநொச்சியில் வசித்து வந்த இவர், சிறீலங்கா சுதந்திரக் கட் சியின் அமைப்பாளர்களில் ஒருவராக விளங்கியிருந்தார்.

1970களில் தனது வீட்டில் பணி யாற்றிய சிறுமி ஒருவரை இவர் பாலியல் வெறியாட்டத்திற்கு உட்படுத்தியதை அடுத்து, அப்பொழுது இவரை சிறீலங்கா காவல்துறையினர் கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்திய பொழுதும், சுதந்திரக் கட்சியின் தலைமையின் உத வியுடன் அவ்வழக்கில் இருந்து விடு தலை பெற்ற இவர், கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக பிரான்சில் வசித்து வருகின்றார்.

இவர் தொடர்பான ஆதாரங்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படும் என் பதை அறியத் தருகின்றோம்.

**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குண்டர் படையை அமைக்கும் முயற்சியில் பெருங்குடிமகன் சர்வே



தேசத்துரோகி கே.பியின் இரண்டு கைகளில் ஒன்றாக விளங்கும் பெருங்குடிமகன் சர்வே, உருத்திரகுமாரனின் பாதுகாப்பிற்கான குண்டர் படை ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக கறுப்பிற்கு நம்பகமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கே.பியின் மற்றுமொரு கையாக விளங்கும் குடு மனோ என்றழைக்கப்படும் வேலும்மயிலும் மனோகரனின் உதவியுடன் இதற்கான ஏற்பாடுகளில் பெருங்குடிமகன் சர்வே ஈடுபடுவதாக தெரிய வருகின்றது.

நோர்வேயில் வசித்து வரும் பெருங்குடிமகன் சர்வே, தனது அடியாட்களில் ஒருவரான பேர்ண் சிறீயின் தலைமையில் இந்தக் குண்டர் படையை அமைப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

தமிழீழ தேசிய உணர்வாளர்களுக்கு அஞ்சி நியூயோர்க்கை விட்டு வெளியேறுவதை நரிகேசி உருத்திரகுமாரன் தவிர்த்து வரும் நிலையில், அவரது பாதுகாப்பிற்காக இந்தக் குண்டர் படையை அமைப்பதற்கான ஏற்பாடுகளில் பெருங்குடிமகன் சர்வே ஈடுபடுவதாக தெரிய வருகின்றது.

இதனிடையே, பொங்குதமிழ் என்ற இணையத்தளத்தில் தாமரை காருண்யன் என்ற பெயரில் தேசவிரோதக் கட்டுரைகளை எழுதி வரும் பெருங்குடிமகன் சர்வே, தமிழீழ தேசிய எழுத்தாளர்களை மின்னஞ்சல் வாயிலாக மிரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

# ஜி.ரி.விக்கு கே.பி புதிய பணிப்புரை!

ஜி.ரி.வியின் நிகழ்ச்சி வடிவமைப்பை மாற்றியமைப்பதற்கான கட்டளையை தேசத்துரோகி கே.பி பிறப்பித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வாரம் ஜி.ரி.வியின் உரிமையாளர்களான அவுஸ்திரேலியாவில் உள்ள செல்வின் சகோதரர்களுடன் தொடர்பு கொண்ட கே.பி, இதற்கான பணிப்புரையை வழங்கியிருப்பதாக எமது ஊடகப் புலனாய்வாளர்கள் அறியத் தந்துள்ளனர்.

இது தொடர்பான ஒலிவடிவம் விரைவில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்